**நாத்தாண்டிய பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 20 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜூன் 30 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 11 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நாத்தாண்டிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மூலதன செலவினம் கணக்கீட்டு செய்யப்படும் கொள்கையை வெளிப்படுத்தியிருக்கவில்லை. | மூலதன செலவினம் மூலதனமாக்குவது தொடர்பாக கணக்கீட்டு கொள்கைகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படுவது தொடர்பாக கணக்கீட்டு கொள்கை இலக்கம் 03 இல் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அக் காரணத்தை மேற் குறிப்பிட்ட கணக்கீட்டு கொள்கையில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | திட்டவட்டமாக இனங்காண முடியாத வருமானம் (முத்திரைக் கட்டனம்) மதிப்பீட்டடு அடிப்படையின் மீது கணக்கீடு செய்வது சபையின் கொள்கையென குறிப்பிட்டிருந்த போதும் மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட தொகையை விஞ்சி | கணக்கீட்டு கொள்ளைகள் பிரகாரம் நடவடிக்கை எடக்க வேண்டும். | 2019 ஆண்டினுள் 2015,2016 மற்றும் 2017 ஆண்டுகளிற்கு ரூபா 45,061,588 ஆன முத்திரைக் கட்டண வருமானம் கிடைத்துள்ளது. அது அவ் வருடங்களில் மதிப்பீட்டு வருமானத்தை |

| | | |
|---|---|---|
| கடந்த ஆண்டுகளுக்காக கிடைத்த ரூபா 45,061,588 ஆன முத்திரைக் கட்டண பெறுவனவை திரண்ட நிதியத்திற்கு செலவுவைக்காது மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்தது. | | விஞ்சி கிடைத்த மிகை தொகை ஒன்றானதுடன் அதை திரண்ட நிதியத்திற்கு கணக்கீடு செய்த போது செலவு மேற்கொள்ளும் முறைமையொன்றில்லை. அதனால் அம் மிகைத் தொகை 2019 ஆண்டு வருமான பெறுவனவாக கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. |

**(ஆ) நிகழத்தக்க பொறுப்புகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய பங்களிப்பு தொகையிற்கு 1997 ஜூன் 01 முதல் செலுத்த வேண்டிய ரூபா 2,071,905 யினை கணக்குகளில் காட்டியிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய செலவினமாக கணக்குகளில் காட்டப்பட வேண்டும். | இது தொடர்பாக வடமேல் உள்ளூராட்சி ஆணையாளரின் வமே/உதி/02/02/02/03 மற்றும் 2019.05.10 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்ட போதும் அதற்குரிய பட்டியல்கள தொடர்பாக தெளிவான விபரமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்ககள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 166,448,632 ஆனதுடன் அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சிய பெற வேண்டிய மீதி ரூபா 14,687,144 ஆனது. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றம் ஊமியர் நம்பிக்கை நிதியத்திற்கு தவணை செலுத்தாததால் மிகை அறவீடாக மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 47,728 மற்றும் ரூபா 43,750 ஆன தொகையொன்று பெற வேண்டிய | பெற வேண்டிய வருமானத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பெற வேண்டிய மீதியை அறவிட தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 2019 திசெம்பர் 31 திகதியன்று செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 89,598,470 ஆனதுடன் அவற்றில் 05 ஆண்டுகளை விஞ்சிய செலுத்த வேண்டிய மீதி ரூபா 153,124 ஆனது. ஊமியர் நம்பிக்கை நிதியத்திற்கு மிகை அறவீடாக செலுத்த வேண்டிய ரூபா 43,750 தொகை கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய மீதியை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் கடன்கொடுனர் மீதினுள் உள்ள பதிவழிக்க முடியுமான கடன்னொடுனர் மீதியை பதிவழிக்க நடவடிக்கை எடுப்பதாக தயவாய் அறிவிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் உடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம்** | | | |
| (i) 129(2)(ஊ) பிரிவு | பிரதேச சபைக்கு பெற வேண்டிய ரூபா 4,846,576 வாடகையை முறையாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெற வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாடகை பணம் தற்போது அறவிடப்படுகின்றது. |
| (ii) 135 பிரிவு | பொது, மத, நற்கருமங்கள் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளுக்காக விடிவிக்க வேண்டிய ஆதன பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | விடிவிக்கப்பட்ட ஆதனங்களை இனங்காணுவதற்கு பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டும். | அவ்வாறான ஆதனங்கள் தொடர்பாக பட்டியலொன்று தயாரிக்குமாறு அறிவிக்கப்படாததனால் அவ்வாறான பட்டியலொன்று இதுவரை தயாரிக்கப்படவில்லை என தயவாய் அறிவிக்கிறேன். |
| (iii) 136 பிரிவு | நிலுவை வீதவரி மற்றும் நிலுவை ஏக்கர் வரி ரூபா 20,897,683 தொகை | பெற வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட | புதிய வீதவரி மீள்மதிப்பீடு தொடர்பாக புதிய ஆதன மதிப்பீடு கிடைத்த பின் பிரதேச சபைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | சொந்தமான ஆதனங்களிலிருந்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (iv) 159(i) பிரிவு | சபைக்கு சொந்தமான சொத்துக்களை வாடகைக்கு வழங்கியதில் அறவிட வேண்டிய ரூபா 3,182,067 தொகையை அறவிட ஆதனத் தடை செய்து மேற்கொள்ள வேண்டிய நடைமுறையை கடைபிடித்திருக்கவில்லை. | பெற வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த பணத்தை இடைக்கிடையே அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கிறேன். |
| **(ஆ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| (i) இலக்கம் 5(6) விதி | குறித்த அலுவலர்கள் உரிய கால எல்லையில் பிரதேச சபைக்கு அறவிட வேண்டிய அனைத்து வருமானம் மற்றும் ஏனைய கட்டணங்களை திரட்டி இருக்கவில்லை. | அறவிட வேண்டிய வருமானத்தை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆண்டினுள் இடைக்கிடையே ஏற்பட்ட நிலைமையினால் வருமானம் சேகரிப்பில் குறைவொன்று ஏற்பட்டதாக தயவுடன் அறிவிக்கிறேன். |
| (ii) இலக்கம் 218 விதி | சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களை ஒவ்வொறு ஆண்டிற்கும் ஒரு முறையேனும் பரிசோதிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | விதி பிரகாரம் கணிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டும். | சபையின் அனைத்து காணி மற்றும் கட்டிடங்களை ஆண்டிற்கு ஒரு முறை பரிசோதிக்க கணிப்பீட்டுச் சபையொன்று நியமிக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | | |
| (i) | 316(1) மற்றும் (2) | பிரதேச சபை பற்றுச் சிட்ட, அடியிதழ் சேர் புத்தகங்கள் மற்றும் பணப் பெறுமானமுடைய புத்தகங்களை விநியோகித்தல் மற்றும் பெற்றுக் கொள்ளல் அலுவலக சேவை உதவியாளர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | சட்ட விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதன் பின்னர் இப் பதிவேட்டில் குறிப்பிட்டு உரிய அலுவலர்களிற்கு ஒப்படைப்பதை பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரூடாக மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிக்கிறேன். |
| **(ஈ)** | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவை** | | | |
| | 9.3.1 பிரிவு திருத்தப்பட்ட 2010 செப்டம்பர் 06 திகதிய மேலதிக 19 | சபையின் 04 வானங்களின் திருத்த வேலைகளுக்கு ரூபா 1,360,100 செலவு செய்தமைக்காக முறையான அங்கீகாரம் பெறப்படவில்லை. | சட்ட விதிகள் மற்றும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையை பெற்று உரிய திருத்தங்களிற்கு பிரகாரம் முன்நடவடிக்கை எடுக்கிறேன். |
| **(உ)** | **வடமேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2019 ஜனவரி 10 திகதிய 2019/02 இலக்க சுற்றறிக்கை** | | | |
| (i) | 18(i) பிரிவு | 2019 ஜனவரி 01 திகதி முதல் 06 மாத காலத்தினுள் குத்தகை வழங்கியுள்ள 87 கடையறைகளின் | ஒழுங்கு முறையான உடன்படிக்கை கைச்சாத்திடலிற்கு விரைவில் | கடையறைகளில் உடன்பட்ட குத்தகை காலம் 25 வருடமாக அங்கீகரித்திற்கொள்ள ஆளுநரிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | சரியான குத்தகைகாரர்களை உறுதி செய்து கொண்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | ஏற்பாடு செய்ய வேண்டும். | சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. |
| (ii) 18(v) பிரிவு | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் குத்தகை வாடகை செலுத்தாதவர்களிடமிருந்து நிலுவை பணம் அறவிட புதிய உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டால் வடமேல் உள்ளூராட்சி ஆணையாளரின் 2019.01.01 திகதிய 2019/02 இலக்க சுற்றறிக்கையின் 18(v) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 135,454,187 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 142,733,858 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

பிரதேச சபையினால் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீத வரி மற்றும் வரி | 17,417 | 19,359 | 22,117 | 20,934 | 20,259 | 22,193 | 20,475 | 23,692 |
| வாடகை | 28,704 | 28,643 | 25,985 | 4,847 | 26,303 | 29,103 | 28,425 | 2,189 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 5,122 | 5,878 | 5,878 | - | 6,109 | 5,966 | 5,966 | - |
| ஏனைய வருமானம் | 230,568 | 226,064 | 340,967 | 132,778 | 266,060 | 255,617 | 236,668 | 252,866 |
| | 281,811 | 279,943 | 394,947 | 158,559 | 318,731 | 312,879 | 291,535 | 278,747 |

❖ சேர்க்கப்பட்ட வருமானத்தினுள் ஆண்டில் பில்லிடப்பட்ட வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானத்திலிருந்து சேர்க்கப்பட்ட வருமானமும் உள்ளடங்கியுள்ளன.

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா 282 மில்லியன் வருமானம் சேகரிக்க மதிப்பீடு தயாரித்திருந்த போதும், முன்னைய ஆண்டுகளிற்குரிய நிலுவை பெறுவனவும் உள்ளடங்களாக ரூபா மில்லியன் 395 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்குரிய பில் இடப்பட்ட ரூபா 280 மில்லியன் பெறுமதியிலிருந்து ரூபா 139 மில்லியன் மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வருமானத்துடன் பெற வேண்டிய ஒட்டுமொத்த வருமானங்களின் சதவீதம் வீதவரி மற்றும் வரி வருமானத்தின் 51% உம், வாடகை வருமானத்தின் 84% உம், முத்திரை கட்டண வருமானதின் 68% உம், நீதிமன்ற தண்டப்பணத்தின் 70% உம் மற்றும் ஏனைய வருமானங்களின் 82 சதவீதமும் ஆகும் என அறிவிக்கிறேன். |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பில்லிடப்பட்ட ரூபா 15,494,505 ஆன வீதவரி தொகையிலிருந்து ஆண்டினுள் சேர்க்கப்பட்டிருந்து ரூபா 10,264,098 மாத்திரமாகும். அது பில்லிடப்பட்ட தொகையின் 66 சதவீத பெறுமானம் ஆனதுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் சபையின் மொத்த வீதவரி நிலுவை பதிவேடுகள் பிரகாரம் ரூபா 20,199,818 ஆனது. கடந்த ஆண்டு நிலுவையான ரூபா 22,953,854 இலிருந்து மீளாய்வாண்டில் சேர்க்கப்பட்டிருந்தது 35 சதவீதம் மாத்திரமானதுடன், உபயோகப் பதிவேடுகளின் படி மீளாய்வாண்டு இறுதியில் வீதவரி நிலுவையான | நிலுவை வீதவரி வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | பலதரப்பட்ட காரணங்களினால் வருமான பரிசோதகர்/வருமானம் சேகரிக்கும் அலுவலர்கள் களத்திற்கு சென்று வருமானம் சேகரிப்பதில் ஏற்பட்ட அசௌகரியங்கள் காரணமாக பில்லிடப்பட்ட வருமானம் சேகரிப்பின் சதவீதம் குறைந்துள்ளதாக அறிவிக்கிறேன். |

ரூபா 20,199,818 இனுள் 05 ஆண்டுகளை விஞ்சிய அறவிட வேண்டிய ரூபா 12,954,273 மீதி காணப்பட்டது.

### 2.2.4 ஏகர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் அறவிட வேண்டியிருந்த ரூபா 697,865 ஆன ஏக்கர் வரி நிலுவையில் ரூபா 654,331 தொகை 05 ஆண்டுகளை விஞ்சிய நிலுவையானது. | நிலுவை வருமானத்தை அறவிட் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் வருமான பரிசோதக அலுவலரை அறிவூட்ட நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். |

### 2.2.5 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று நிலுவை கடைவாடகை மற்றும் குத்தகை வாடகை ரூபா 4,846,576 ஆனதுடன் அவற்றில் 05 வருடங்ளை விஞ்சிய கடைவாடகை மற்றும் குத்தகை வாடகை ரூபா 163,670 உம், 01 – 05 வருட காலத்திற்கான கடைவாடகை மற்றும் குத்தகை வாடகை ரூபா 818,161 உமானது. | நிலுவை வருமானத்தை அறவிட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 26,880,176 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 91,102,367 ஆனது. | குறித்த அனைத்து தொகையையும் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020.03.31 திகதியளவில் நீதிமன்ற தண்டப்பணத்தில் ரூபா 24,453,639 அறவிடப்பட்டுள்ளது. 2020.03.31 திகதியளவில் முத்திரைக் கட்டணம் பணமாக ரூபா 36,725,649 அறவிடப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 2019 திசெம்பர் 31 திகதியளவில் 42 உப விதிகளையும், புதிய 07 உப விதிகளையும் சபை விதித்திருந்தன. | உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்வைக்கப்பட்ட விடயங்களுடன் இணங்குகிறேன். |

**(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் படி நிரைவேற்ற வேண்டியிருந்த நடவடிக்கைகளிற்காக மீளாய்வாண்டில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும், அது 2014 பெப்ரவரி 17 திகதிய PED/RED/01/04/2014/01 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பந்தி 04 இற்கு இணங்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க வேண்டும். | 2019 ஆண்டிற்காக அபிவிருத்தித் திட்டத்திற்கு மேலதிகமாக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் எனும் பெயரில் செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்திருந்ததாக அறிவிக்கிறேன். |

**(இ) ஒதுக்கீடு வழங்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் சபையினால் நிரைவேற்ற வேண்டியிருந்த 05 செயற்பாடுகளிற்கு வருடாந்த பாதீட்டிலிருந்து ஒதுக்கீட்டை பெற்றுக் | குறித்த கருத்திட்டத்திற்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்திற்கு | இவ் வேலைத் திட்டம் தொடர்பாக ஏனைய செலவு விடயங்களின் கீழ் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| கொள்ளாததனால் அவற்றை மேற்கொள்ள முடியாதிருந்தன. | அமைய ஒதுக்கீட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | |

**(ஈ) நோக்கத்திற்கு மாற்றமான செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை தனது நோக்கங்களிற்கு முரணாக செயற்படுத்திய 19 செயற்பாடுகள் காணப்பட்டன. | தேவைப்பாட்டை முன்னுரிமைபடுத்தி திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | இவ் ஆண்டினுள் ஏற்பட்ட தேவைப்பாடுகளின் மீது கைத்தொழிற் குழுவின் மற்றும் மகா சபையின் அங்கீகாரத்துடன் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செலவினத் தலைப்பு மாற்றல் மதிப்பீட்டினூடாக ஒதுக்கீடு ஏற்பாடு செய்து கொண்டு செயற்படுத்தியுள்ளதாக மேலும் அறிவிக்கிறேன். |

**(உ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 22 செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ரூபா 7,834,500 ஒதுக்கீடு வழங்கப்பட்ட போதும் திசெம்பர் 31 திகதியளவில் எதிர்பார்த்த விளைவுகளை அடைந்து கொள்ளாது கைவிடப்பட்டிருந்தன. | திட்டமிடும் பலவீனங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டியதுடன் முக்கிய விடயங்களிற்கு மாத்திரம் ஒதுக்கீட்டை ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். | வருடாந்த பாதீட்டினால் ரூபா 7,834,500 ஆன ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த 22 விடயங்கள் எதிர்பார்த்த விளைவுகளை அடையாது கைவிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ள போதும் அப் பணம் செலவினத் தலைப்பு மாற்றல் மதிப்பீட்டினூடாக வேறு செலவு விடயங்களிற்கு செலவிட ஈடுபடுத்தப்பட்டுள்ளது. |

**(ஊ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வர்க்க கிலோ மீட்டர் 168.28 பரப்பளவுடன் கூடிய பிரதேச சபை அதிகார எல்லையில் குப்பை சேகரித்தல் 03 வலயங்களிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படாத கழிவுகள் தனியார் காணியொன்றிற்கு வெளியிடப்பட்டுள்ளதுடன் குறித்த காணிக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்று இருக்கவில்லை. கழிவு முகாமைக்காக 72 எண்ணிக்கையான அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டு இருந்ததுடன் குறித்த செயற்பாட்டிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 48,890,841 ஆன செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டு இருந்தது. சபை ரூபா 2,478,224 ஆன வருமானமொன்று திண்மக் கழிவு முகாமையூடாக ஆண்டினுள் ஈட்டப்பட்டிருந்தது. | பிரதேசங்களை மற்றும் இடங்களை எல்லைப்படுத்தாது கழிவுகளை சேகரிக்க திட்டமிட வேண்டும். | சபை அதிகார எல்லையினுள் கழிவு பொருள் முகாமை 03 வலயங்களாக பிரித்து மேற்கொள்ளப்படுவதுடன் சபையிற்கு சொந்தமாகக் காணப்படும் வளங்களின் அளவின் பிரகாரம் சனநெறிசல் மற்றும் தேவைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு சேவை வழங்கல் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கிறேன். |

**(எ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019-2030 இடையிலான காலத்தினுள் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான சில ஆரம்ப நடவடிக்கைகள் சபையினால் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. | தொடர்ந்தும் குறித்த நோக்கங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குகிறேன். |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 223 ஆனதுடன், 239 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தியதன் காரணமாக 19 ஊழியர் மிகை | வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள மற்றும் மிகையை அங்கீகரித்துக் | ஒப்பந்த மற்றும் ஆணை அடிப்படையில் ஆட்சேர்க்கும் போது உள்ளூராட்சி ஆணையாளரின் |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டன. மூன்றாம் நிலை பிரிவிற்குரிய தொழில்நுட்ப அலுவலர் (விஷேட) தர பதவி 07 ஆண்டுகளாக வெற்றிடமாக நிலவியதுடன் அங்கீகார ஆளணியை விஞ்சி 29 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சபையினால் ஆட்சேர்ககப்பட்டிருந்தனர். | கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகாரத்தின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலதிக பதவிகளிற்கு அப்பதவிகளை அங்கீகரித்துக் கொள்ள முன்நடவடிக்கைகளுக்காக சமர்பிப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | கடந்த வருடங்களில் இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டுச் சென்ற 32 ஊழியர்களிலிடமிருந்து ரூபா 477,282 ஆன மீதியொன்று ஊழியர் கடனாக அறவிட வேண்டியதாக இருந்தது. | நிலையான மீதிகளை விரையில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந் நிலுவை மீதிகளை அறவிட தொடர்ந்தும் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2014 ஆண்டிற்கு முன்னர் 38 ஊழியர்களின் பிணைப் பணமாக பெறப்பட்ட ரூபா 87,319 மற்றும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை மேலும் 20 ஊழியர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 9,850 ஆன பணத்தையும முதலீடு செய்யாது ஊழியர் பிணையாக வைப்புக் கணக்கில் காணப்பட்டது. | ஊழியர்களின் பிணைப் பணம் முதலீடு செய்யப்பட வேண்டும். | இப் பணத்தின் 11 நபர்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபட்டுள்ளதுடன் அப் பிணைப் பணத்தை முன்கொண்டு செல்ல வேண்டும். தற்போது சேவையில் இல்லாத 27 நபர்களின் பிணைப் பணத்தை பெற்றுக் கொள்ள கோரிக்கை விடுக்கப்படாததால் சபை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். அப் பணத்தை முதலீடு செய்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 23 செலவின விடயங்களிற்காக சேவை வழங்க ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 4,375,000 ஆன ஒதுக்கீடு எஞ்சி அல்லது ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் குறித்த சேவைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீட்டை பயன்படுத்தி செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | இங்கு குறிப்பிடப்படும் 15 செலவு விடயங்கள் மேற்கொள்ளப்படாமைக்கான தகவல்கள் 3.1(உ) இன் கீழி குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | சபையின் மூலதன செலவுகளை மேற்கொள்ள 07 விடயங்களிற்கு ரூபா | ஒதுக்கீட்டை பயன்படுத்தி | இங்கு குறிப்பிடப்படும் 06 செலவு விடயங்கள் |

| | | |
|---|---|---|
| 4,950,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும், அவை எஞ்சி அல்லது ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்ததுடன் குறித்த விடயங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | மேற்கொள்ளப்படாமைக்கான தகவல்கள் 3.1(உ) இன் கீழி குறிப்பிடப்பட்டுள்ளது. நகர மண்டபத்திற்கு தளபாடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் கொள்வனவிற்காக ஒக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் பிரதான அலுவலகத்தின் அலுவலக வேளைகள் நகர மண்டபத்தினுள் நிகழ்வதனால் உபகரணங்களிற்காக செலவு மேற்கொள்ள வேண்டி ஏற்படவில்லை. |

**4.2 உள்ளக கணக்காயவு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் நிகழும் நதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக போதிய உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வை வலுவூட்டி அதனை செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது சபையின் 06 அங்கத்தவர்களை உள்ளடக்கிய உள்ளக கணக்காய்வு அலகொன்றை நிருவியுள்ளதுடன் உள்ளக கணக்காய்வு திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் உள்ளக கணக்காய்வை மேற்கொண்டு அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. |

**4. 3 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாடறுப்பிடமொன்றை நிர்மாணிப்பதற்கு 2002 ஆண்டில் 04 நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 600,000 ஆன பணத்தொகை மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பாக | கணக்குகள் செயற்குழு தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேற்குறிப்பட்ட தொகையை மீள் செலுத்துமாறு பணம் பெற்றுக் கொண்ட 04 நபர்களிற்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் ஒருவரி வெளிநாடு சென்றுள்ளதுடன் வந்தவுடன் தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

அலுவலர்களிடமிருந்து அறவிடுமாறு 2016 ஒக்டோபர் 13 திகதிய மாகாண கணக்குகள் செயற்குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும் இது வரை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.